இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

2.

மறு விசாரணை –

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 316/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராமர் (Pw.6) |
| Father/Husband Name | : | சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day February of 2024
( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது துலுக்கன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 13.09.2020 ம் தேதின்று இரவு 8.30 மணியளவில் நரிக்குடி போலிசார் எங்கள் ஊர் கண்மாய் பக்கத்தில் உள்ள இடத்தில் நடந்த சண்டையை பற்றி விசாரித்து அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும் சுப்பன் மகன் சீனிவாசனும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி-

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்றால் சண்டை நடந்த விபரத்தை எழுதி இருந்தார்கள். ஒரே ஒரு

கையொப்பம் வெள்ளைதாளில் செய்தேன். அது போக காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்யவில்லை. சம்பவ இடத்தில் செய்தேன். அதில் எதிரிகள் பெயர்கள் எழுதி இருந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அர்ச்சுணன் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 316/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : காளிஸ்வரன் (Pw.5)
Father/Husband Name : பாண்டிமுத்து
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day February of 2024

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது துலுக்கன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 12.09.2020 ம் தேதியன்று இரவு 9 மணியளவில் சண்டை நடந்தது. வள்ளிமயில் என்பவரை மலைச்சாமி கையால் அடித்தார். அழகர்சாமி, இளையராஜா ஆகியோர் வள்ளிமயிலை பார்த்து உனக்கு என்னெக்கா இருந்தாலும் எங்கள் கையால் தான் சாவு என்று மண்வெட்டியால் மிரட்டினார்கள். கையில் வள்ளிமயிலுக்கு வீக்கம் ஏற்பட்டுவிட்டது. பின்பு வள்ளிமயில் அண்ணன் முத்துகிருஷ்ணன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். போலிசார் விசாரிக்கும்போது வள்ளிமயில் பக்கத்து வயலில் தான் நின்று கொண்டிருந்தேன். மேலே சொன்ன சங்கதிகளை தான் சென்னேன்.

எ.த.கு.வி –

2. சண்டை நடந்த இடத்தில் எனது வயல்காடு கிடையாது என்றால் சொந்த வயல்காடு கிடையாது ஒத்திக்கு உழுது வந்தேன். சண்டை நடந்த இடத்தில்

இருந்து எனது வீடு 1/2 கிமீ தூரத்தில் உள்ளது. எதிரியின் சித்தி புகார் கொடுத்து என் மீதும் அர்ச்சுணன், வெள்ளக்குட்டி ஆகியோர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். PCR வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சம்பவத்தில் இருந்து நாங்களும் எதிரிகளும் பேசி கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து பிணையில் வெளியே வந்தபிறகு இந்த வழக்கு கொடுத்தோம். வள்ளிமயிலும் எதிரிகளும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நானும் எதிரியும் வேறு வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள். வள்ளிமயிலுக்கு எவ்வளவு வயல்காடு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. காவல் நிலையம் யார் யார் சென்று புகார் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வள்ளிமயிலும் எனது சமூகத்தைச் சேர்ந்த அர்ச்சுணன் என்பவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் இல்லை. வள்ளிமயிலுக்கு எங்கங்கே காயங்கள் ஏற்பட்டது என்றால் வலது முன்னங்கையில் காயம். நான் சொல்வது போல் சொன்ன நாளநேரத்தி சம்பவமே நடக்கவில்லை என்றாலும் நான் அந்தஇடத்தில் இல்லை என்பதாலும் அர்ச்சுணன் எனது உறவினர் என்பதால் அவரது துாண்டுதலின் பேரில் வள்ளிமயில் கொடுத்த பொய் புகாருக்கு ஏற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவம் எதுவும் செய்யவில்லை என்றாலும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதால் நானும் அர்ச்சுணன் ஆகியோர் சேர்ந்து பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

3. இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 316/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | சங்கரபாண்டி (Pw.4) |
| Father/Husband Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day February of 2024

<u>( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)</u>

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது துலுக்கன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சண்டை பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் இல்லை. வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது அதை தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அ.த.கு.வி :–

2. கடந்த 12.09.2020 ம் தேதியன்று காலை 9 மணிக்கு துலுக்கன்குளத்தில் உள்ள வள்ளிமயிலுக்கு சொந்தமான நிலத்தில் வள்ளிமயில் என்பவர் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருக்கும்போது மலைச்சாமி, அழகர்சாமி , இளையராஜா ஆகிய

மூவரும் சேர்ந்து வள்ளிமயிலை பார்த்து அசிங்கமாக திட்டியதையும் பாய்கிற தண்ணீரை மறித்து வள்ளிமயிலை கிழே அடித்து தள்ளி கையை பிடித்து திருகியதையும் இளையராஜா வள்ளிமயிலை கீழே தள்ளி காலால் மிதித்து முதுகில் ஊமைக்காயம் ஏற்படுத்தியதையும் கொலை மிரட்டல் விடுத்ததையும் நேரில் பார்த்து விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

3.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.